PAFFREL

## පාර්ලිමේන්තු මහ මැතිවරණයේ නිරීක්ෂණ ක්‍රියාන්විතයට නිරීක්ෂකයන් 13,000 ක්

2015 පාර්ලිමේන්තු මහ මැතිවරණය පිළිබඳ දෙවැනි තත්ත්ව වාර්තාව - 2015 අගෝස්තු 12

2015 අගොස්තු 17 වන දා පැවැත්වීමට නියමිත පාර්ලිමේන්තු මහ මැතිවරණය සඳහා තවත් ඇත්තේ දින 07 කට ද අඩු කාලයකි. මැතිවරණයෙහි තැපැල් ඡන්ද ප්‍රකාශකිරීමේ කටයුතු මේ වනවිට සාර්ථකව අවසන්ව ඇත. එසේම, මැතිවරණය ආශ්‍රිත කටයුතු සාර්ථකව පැවැත්වීම උදෙසා මැතිවරණ දෙපාර්තමේන්තුව සහ පොලිස් දෙපාර්තමේන්තුවද මේ වනවිට උපරිම සූදානමක පසුවේ.

ඡන්ද දායකයන් 15,044,490 ක ප්‍රමාණයක් මෙවර ඡන්දයේදී ඡන්දය භාවිතාකිරීමට සුදුසකම් ලබා ඇත. මෙම පිරිස දිවයින පුරා ඡන්ද මධ්‍යස්ථාන 12,314 ක දී ඡන්දය භාවිතාකිරීමට නියමිතය.

### මහ මැතිවරණය ආශ්‍රිත නීතිරීති උල්ලංඝනයවීම්

මෑත කාලීනව පැවති සියලුම මැතිවරණ අතරින් මැතිවරණ නීති රීති සහ මැතිවරණය ආශ්‍රිත සාමාකාමී වාතාවරණය වඩාත් හොඳින් ආරක්ෂා වෙමින් පවතින මැතිවරණයක් වශයෙන් මෙවර මැතිවරණය හැඳින්විය හැක. මෙම තත්ත්වය ඇතිකිරීම සම්බන්ධයෙන් මැතිවරණ කොමසාරිස්වරයා ප්‍රධාන මැතිවරණ දෙපාර්තමේන්තුවත් පොලිස්පතිවරයා ඇතුළු පොලිස් දෙපාර්තමේන්තුවත් ප්‍රමුඛ දායකත්වයක් සපයා ඇත. එසේම, වඩාත් සාමකාමී මැතිවරණයක් සහතික වන පරිදි මැතිවරණ නීතිරීති සහ මැතිවරණ කොමසාරිස්වරයාගේ නියෝග ආදිය උල්ලංඝනය නොවන පරිදි කටයුතු කළ දේශපාලන පක්ෂ සහ අපේක්ෂකයන්ටද මේ සම්බන්ධයෙන් ප්‍රණාමය පළවිය යුතුය.

එසේ ද වුව, මැතිවරණ දින දක්වා ඉතිරිව ඇති දින කිහිපය තුළත් ඉන් අනතුරුවත් මෙකී සාමකාමී තත්ත්වය වැඩිදියුණු කර පවත්වාගෙන යාමට නම් අවධානය යොමු කළ යුතු සිදුවීම් කිහිපයක්ද වාර්තාවී ඇති බව මෙහිලා සඳහන් විය යුතුය.

මෙවර මැතිවරණයෙහි එතෙක් පැවති සාමකාමී තත්ත්වයට එල්ලවූ බරපතලපම බලපෑම වශයෙන් ජුනි මස 31 වනදා කොළඹ කොටහේන, බ්ලූමැන්ඩල් ප්‍රදේශයෙන් වාර්තා වූ වෙඩි තැබීමේ සිද්ධිය සඳහන් කළ හැක. අදාළ සිද්ධියේදී එක්සත් ජාතික පක්ෂ අපේක්ෂක අමාත්‍ය රවී කරුණානායක මහතාගේ ආධාරකරුවන් පිරිසකට වෙඩි ප්‍රහාරයක් එල්ලවූ අතර සිද්ධියෙන් පුද්ගලයන් දෙදෙනෙකු මරණයට පත්විය.

අදාළ වෙඩි තැබීමේ සිද්ධිය පසුපස ඇති අරමුණු සම්බන්ධයෙන් විවිධ මතවාද ද ඉදිරිපත්ව ඇති බව සැලකිය යුතුය. එවැනි එක් අදහසකට අනුව මෙම සිදුවීම දේශපාලනමය පසුබිමක් ඇති එකක් නොවන අතර හුදෙක් එය ප්‍රදේශය කේන්ද්‍ර කරගනිමින් කටයුතු කරන පාතාල කල්ලි දෙකක් අතර ඇතිවූ ගැටුමක් පමණි. අදාළ සිද්ධිය සම්බන්ධයෙන් අපරාධ පරීක්ෂණ දෙපාර්තමේන්තුව මූලිකව පරීක්ෂණ පැවැත්වෙන අතර සිද්ධිය සම්බන්ධයෙන් සැකකටයුතු පුද්ගලයෙකු ද අත්අඩංගුවට ගනු ලැබ ඇති බව මෙම වාර්තාව පිළියෙළ වන අවස්ථාව වනවිට වාර්ථාවී ඇත.

අදාළ සිදුවීම පසුපස ඇති අරමුණ කවරක් වුවද දේශපාලන ප්‍රචාරණ වැඩසටහනක් පැවැත්වෙන අතරතුර සිද්ධිය සිදුවීම තුළ එහි කිසියම් දේශපාලන බැඳියාවක් ප්‍රබලව මතුව පෙනෙන්නක්ව ඇත.

එසේම සාමකාමී මැතිවරණයක් අපේක්ෂා කළ පුරවැසියන් සහ පුරවැසි සංවිධාන අතර කිසියම් කම්පනයක් ඇති කරන්නටද මෙම සිදුවීම දායකව ඇති අතර මෙවැනි සිදුවීම් නැවත ඇතිවීම වලක්වා ගැනීම එනයින් අත්‍යවශ්‍යව ඇත.


මැතිවරණ කොමසාරිස්වරයාගේ පැමිණිල්ලක් සහ නිර්දේශ මත පදනම්ව තැපැල් අමාත්‍යංශයේ ලේකම්වරයාව සිටි අබ්දුල් මජීඩ් මහතා එම තනතුරින් ඉවත් කිරීමට ජනාධිපතිවරයා විසින් කටයුතුකිරීම සම්බන්ධයෙන්ද අපගේ අවධානය යොමුව ඇත. අදාළ ලේකම්වරයා විසින් මැතිවරණයේ දී එක් අපේක්ෂකයෙකුට විශේෂයෙන් වාසි සැලසෙන පරිදි සිය අමාත්‍යංශයේ පහසුකම් වෙන්කරලීම ජනාධිපතිවරයාගේ මෙකී තීරණයට හේතුවූ බව කියැවේ.

තැපැල් අමාත්‍යංශයේ ලේකම්වරයා සම්බන්ධයෙන් මතුවූ මෙම තත්ත්වයට අමතරව තවත් රාජ්‍ය නිලධාරීන් 53 ක් සම්බන්ධයෙන් විවිධ පැමිණිලි එල්ලව ඇත. මෙවර මැතිවරණය රාජ්‍ය නිලධාරීන්ට වඩාත් ස්වාධීනව සහ බලපෑම්වලින් නිදහස්ව කටයුතුකිරීමට අවස්ථාව ලැබී ඇති මැතිවරණයකි යන්න අපගේ නිරීක්ෂණයයි. එවැනි නිදහස් තත්ත්වයක් තිබියදීත් රාජ්‍ය නිලධාරීන් සම්බන්ධයෙන් මෙවැනි තත්ත්වයක් ඇතිවීම කනගාටුදායක කාරණයකි.


මෙවර මැතිවරණය ආශ්‍රිතව බරපතල ප්‍රචණ්ඩ ක්‍රියාවන්ට අදාළ නීති උල්ලංඝනයන් 151 ක් ද රාජ්‍ය බලය, දේපළ සහ රාජ්‍ය නිලධාරීන් අයුතු ලෙස භාවිතයට ගැනීම්වලට අදාළ නීති උල්ලංඝනයන් 128 ක් ද ඇතුළුව සිදුවීම් 1028 ක් පැෆ්රල් සංවිධානයේ විශේෂ මැතිවරණ නිරීක්ෂණ ඒකකය වෙත වාර්තාවී ඇත.


දිස්ත්‍රික් වශයෙන් ගත් කළ මැතිවරණ ආශ්‍රිත නීති උල්ලංඝනයන් වැඩිම ප්‍රමාණය (සිදුවීම් 102 ක් ) කොළඹ දිස්ත්‍රික්කයෙන් වාර්තාවී ඇත. ඊට අමතරව කුරුණෑගල (80), ගාල්ල (70) සහ බදුල්ල (70) දිස්ත්‍රික්වලින්ද සැලකිය යුතු සිද්ධීන් ප්‍රමාණයක් වාර්තාවී ඇත.

**දිස්ත්‍රික්ක අනුව මැතිවරණ නීති උල්ලංඝනයන්**




2015 අගෝස්තු 11 දින පෙරවරු 10.30 දක්වා ගතවූ කාලය තුළ පැෆ්රල් සංවිධානයේ විශේෂ මැතිවරණ නිරීක්ෂණය ඒකකයට වාර්තා වූ පැමිණිලි ආශ්‍රයෙන් ඒ ඒ පක්ෂ සහ කණ්ඩායම් සිදුකළ මැතිවරණ නීති උල්ලංඝනයන් සහ මැතිවරණ නීති උල්ලංඝණයන් නිසාවෙන් ඒ ඒ පක්ෂ සහ කණ්ඩායම් පීඩාවට පත්වීම් පහත පරිදි ඉදිරිපත් කළ හැක.




රාජ්‍ය බලය සහ රාජ්‍ය දේපළ අනිසි ලෙස මැතිවරණ ප්‍රචාරණය සඳහා යොදාගැනීමේ ක්‍රියාවන්ට ආණ්ඩු පක්ෂය සහ විපක්ෂය යන දෙපාර්ශවයම එක හා සමානව වගකිව යුතුව ඇත. කෙසේ නමුත් පළාත් මට්ටමේදී රාජ්‍ය සම්පත් අවභාවිතය බොහෝ විට පළාත් සභා සහ පළාත් පාලන ආයතනවල විපක්ෂ මන්ත්‍රීවරුන් අතින් සිදුවනු දැකිය හැකිය.

රාජ්‍ය සේවකයන් සිය රාජකාරී කටයුතු ක්‍රියාවෙහි පවතින නීතිරීති හා රෙගුලාසිවලට අනුකූලව පවත්වාගෙන යන්නේ නම් මැතිවරණ නීති උල්ලංගනයකිරීමට දේශපාලන අපේක්ෂකයන්ට ඇති ඉඩකඩ අහෝසිවනු ඇත. එසේ හෙයින් සිය රාජකාරී කටයුතුවලදී සෘජුව කටයුතු කරන්නට රාජ්‍ය සේවකයන් සිහි තබාගත යුතුය. මෙලෙස නිතිරීතිවලට එකඟව සහ මැතිවරණ නීති උල්ලංඝනය නොවන පරිදි සෘජුව කටයුතුකිරීමට යාමේදී යම් හෙයකින් ඔබට කිසියම් බලපෑමකට හෝ ගැටලුවකට මුහුණදීමට සිදුවුවහොත් එවැනි අවස්ථාවක පැෆ්රල් සංවිධානය වශයෙන් ඔබට සහයෝගය දැක්වීමට අපි කටුයතු කරන බවද මෙහිලා අවධාරණය කරමු.

මැතිවරණ සමය තුළ රාජ්‍ය සේවා කොමිෂන් සභාව විසින් නිසි පටිපාටියට අනුව සිදුකරන රාජ්‍ය සේවයේ පත්කිරීම්, මාරුකිරීම් හා උසස්කිරීම් සහ එකී කොමිෂන් සභාවේ හෝ මැතිවරණ කොමසාරිස්වරයාගේ අනුමැතියකින් තොරව සිදුකරන රාජ්‍ය සේවයට අදාළ අන් සියලුම පත්කිරීම්, මාරුකිරීම් සහ උසස්කිරීම් නීති විරෝධී වේ.

කෙසේ වුවද, මෙකී නීතිමය තත්ත්වය පිළිබඳ නිසි සැලකිල්ලක් නොදක්වමින් රාජ්‍ය ආයතන ගණනාවක සේවකයන් පත්කිරීම්, මාරුකිරීම් සහ උසස්කිරීම් සිදුව ඇත. ඒ යටතේ, රජයේ සංස්ථා, අධිකාරී හා වෙනත් ආයතන 12 ක්, රාජ්‍ය/පළාත් අමාත්‍යංශ 05 ක්, කලාප/කොට්ඨාශ අධ්‍යපාන කාර්යාල ඇතුළු අධ්‍යාපන ආයතන 04 ක්, පළාත් සභා සහ පළාත් පාලන ආයතන 04 ක්, පොලිස් ස්ථාන 03 ක්, පළාත්/ප්‍රාදේශීය සෞඛ්‍ය ආයතන 03 ක්, සහ රාජ්‍ය/පළාත් දෙපාර්තමේන්තු 02 ක් වශයෙන් රාජ්‍ය ආයතන 33 ක් තුළ සිදුවූ අයථා සේවක පත්කිරීම්, මාරුකිරීම් සහ උසස්කිරීම් නිරීක්ෂණය විය.

අපේක්ෂකයන් විසින් ප්‍රසිද්ධ කරනු ලබන පෝස්ටර් හා කටවුට් ආදිය ඉවත්කිරීමේ ක්‍රියාවලිය පැසසිය යුතු තරම් සාර්ථක ලෙස ක්‍රියාත්මක වේ. කෙසේ නමුත් මැතිවරණ සමය තුළ අපේක්ෂකයන් සහ පක්ෂ/කණ්ඩායම් විසින් පවත්වාගෙන යන කාර්යාල සම්බන්ධයෙන් අදාළවන නීතිරීති සම්බන්ධයෙන් කිසියම් අනවබෝධයක් විවිධ පාර්ශවයන් අතර මතුව තිබෙනු දැකිය හැකිය.

එසේ හෙයින් මැතිවරණ කොමසාරිස්වරයා වරින් වර නිකුත් කරන උපමාන ආදිය සුදුසු පරිදි නීති බවට යාවත්කාලීනකිරීමත් ඒ සම්බන්ධයෙන් ඡන්ද දායකයන්ගේ දැනුම්වත්භාවය ඉහළ නැංවීමට කටයුතුකිරීමත් ඵලදායීවනු ඇත.

විහාරස්ථාන ආශ්‍රිතව පැවැත්වෙන මැතිවරණ ප්‍රචාරණ රැස්වීම් සහ ආගමික පාර්ශවයන් විසින් ඉදිරිපත් කර ඇති ඡන්ද අපේක්ෂකයන් සම්බන්ධයෙන්ද යම් යම් ගැටුම්කාරී තත්ත්වයන් මතුව තිබෙනු පැෆ්රල් සංවිධානය වෙත නිරීක්ෂණයව ඇත. විශේෂයෙන් විහාරස්ථාන ආශ්‍රිතව

පැවැත්වෙන සාමාන්‍ය රැස්වීම්/සාකච්ඡාවන් හරහා හෝ ආගමික පුද පූජාවන් හරහා හෝ දේශපාලන පණිවිඩ ව්‍යංගාර්ථයෙන් ලබාදීමට උත්සාහකිරීම වැලැක්වීම සම්බන්ධයෙන් නීතිය ක්‍රියාත්මක කරන බලධාරීන්ගේ වැඩි අවධානය යොමුවීම අත්‍යවශ්‍යව ඇත.

**තැපැල් ඡන්දය**

මැතිවරණ දෙපාර්තමේන්තුව විසින් නිකුත් කරන ලද නිල සංඛ්‍යා ලේඛණවලට අනුව මෙවර තැපැල් ඡන්දය සඳහා පුද්ගලයන් 628,925 ක් අයදුම් කර තිබිණි. මෙයින් අයදුම්පත් 62,102 ක් ප්‍රතික්ෂේපව ඇත. ඒ අනුව මෙවර තැපැල් මහ මැතිවරණයේදී තැපැල් ඡන්දය ප්‍රකාශකිරීමට සුදුසුකම් ලබාසිටි ඡන්ද දායකයන් සංඛ්‍යාව 566,823 කි.

මෙවර තැපැල් ඡන්ද ප්‍රකාශකිරීමේ කටයුතු මූලික වශයෙන් පසුගිය 03, 05, සහ 06 තෙදින තුළ සිදුවුණි. ඒ යටතේ ගුරු සේවයේ සහ පොලිස් සේවයේ නිලධාරීන් හට අගෝස්තු 03 වනදාත් සෙසු රාජ්‍ය සේවකයන් වෙනුවෙන් 05 සහ 06 දෙදිනත් තැපැල් ඡන්ද ප්‍රකාශකිරීම සඳහා වෙන්ව තිබිණි. මෙකී දිනවලදී සිය තැපැල් ඡන්දය ප්‍රකාශකිරීමට අපොහොසත්වූ රාජ්‍ය සේවකයන් හට පසුගිය 08 වනදා සහ 11 වනදා දිස්ත්‍රික් මැතිවරණ කාර්යාල තුළදී තැපැල් ඡන්දය ප්‍රකාශකිරීමට අවස්ථාව සලසා තිබිණි.

මෙවර මැතිවරණයෙහි තැපැල් ඡන්ද ප්‍රකාශකිරීමේ කටයුතු පෙර මහ මැතිවරණවලට සාපේක්ෂව සිදුවීම් අවම සහ සාමකාමී මට්ටමකින් පැවැත්විණි. කෙසේ නමුත් ත්‍රිකුණාමලය දිස්ත්‍රික්කයේ කින්නියා ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලයෙහි ස්ථාපිත කර තිබූ තැපැල් ඡන්ද මධ්‍යස්ථානය ආශ්‍රිතව අගෝස්තු 05 වනදා ඇතිවූ සිද්ධිය තැපැල් ඡන්දයෙහි සාමකාමීත්වයට එල්ලවූ බරපතල තර්ජනයක් විය. මෙම සිද්ධියේදීත්‍රිකුණාමලය දිස්ත්‍රික් එක්සත් ජනතා නිදහස් සන්ධාන අපේක්ෂක, නැගෙනහිර පළාත් සභාවේ හිටපු මහ ඇමති අබ්දුල් මජීඩ් මොහොමඩ් නජීබ් සහ ඔහුගේ ආධාරකරුවෙකු කින්නියා ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලයෙහි තැපැල් ඡන්ද මධ්‍යස්ථානයට බලහත්කාරයෙන් ඇතුළුවීමට උත්සාහ කිරීම සම්බන්ධයෙන් චෝදනා ලැබූ අතර අයුතු ඇතුල්වීම සහ රාජකාරියට බාධාකිරීම යන චෝදනා යටතේ ඔවුන් දෙදෙනා අත්ඩංගුවට ගෙන අධිකරණයට පමුණුවනු ලදුව ඇපමත නිදහස් කර හැර ඇත.

**මැතිවරණ නිරීක්ෂණ ක්‍රියාවලිය**

2015 පාර්ලිමේන්තු මහ මැතිවරණයේ නිරීක්ෂණය කාර්යයන් සඳහා පැෆ්රල් සංවිධානය විසින් ක්‍රියාත්මක කරන ලද සැලසුම් මේ වනවිට සාර්ථකව ක්‍රියාත්මක වෙමින් පවතී. ඒ අනුව දිවයින පුරා පිහිටි ඡන්ද මධ්‍යස්ථානවලට අනුයුක්ත කරන ලදුව ස්ථානගත මැතිවරණ නිරීක්ෂකයන් 12,314 ක් කාර්යයේ යෙදවීමට සූදානම් කර ඇත. මෙලෙසම, මැතිවරණ නිරීක්ෂණය සම්බන්ධයෙන් හසළ අවබෝධයක් ඇති නිරීක්ෂකයන් සිව් දෙනෙකු බැගින් යුත් ජංගම රථ 335 ක් මැතිවරණ දිනය තුළ සෑම ප්‍රාදේශීය ලේකම් කොට්ඨාශයකටම යෙදවීමටත් කටයුතු සම්පාදනය කර ඇත. එසේම නිරීක්ෂකයන් සිව් දෙනෙකුගෙන් යුත් ජංගම රථ 25 ක් දිවයින පුරා අවධානම් සහගතයැයි හඳුනාගත් කළාප ආවරණය සඳහා මුදා හැරෙනු ඇත. මේ අනුව මෙවර මහ මැතිවරණයේ දී නිරීක්ෂකයන් 13, 754 ක් පැෆ්රල් සංවිධානයේ නිරීක්ෂණ ක්‍රියාන්විතය සඳහා දායකවනු ඇත.

මහ මැතිවරණයෙහි නිරීක්ෂකයන් වශයෙන් කටයුතු කිරීමට නියමිත පුද්ගලයන් වෙනුවෙන් සකස්කරන ලද පුහුණු වැඩසටහන් සියල්ල මේ වනවිට සම්පූර්ණ කර අවසන්ව ඇත. පළපුරුදු නීතිඥවරුන් සහ සෙසු සුදුසකම් සහිත සම්පත් දායකයන්ගෙන් සමන්විත කණ්ඩායම් විසින් මෙකී නිරීක්ෂක පුහුණු සැසි පවත්වන ලදි. ඒ අනුව ඉදිරි මැතිවරණය සඳහා නිරීක්ෂණ කාර්යයේ යෙදවීමට අපේක්ෂිත සියලුම ස්ථානගත සහ ජංගම නිරීක්ෂකයන් පාර්ලිමේන්තු මහ මැතිවරණය සඳහා බලපවත්නාවූ නීති සහ රෙගුලාසි මෙන්ම මැතිවරණ දිනයේදී ඡන්ද මධ්‍යස්ථාන ආශ්‍රිතවත් ඉන් පිටතදීත් කටයුතු කළ යුතු ආකාරය සම්බන්ධයෙනුත් මුලුමනින්ම දැනුම්වත් කර ඇත.

මහ මැතිවරණය සඳහා නිරීක්ෂණයෙන් දායකවීමට නියමිත සියලුම විදේශීය නිරීක්ෂකයන්, එනම් පුද්ගලයන් 14 දෙනෙකු මේ වනවිට දිවයිනට පැමිණ ඇත. මෙකී සියලුම නිරීක්ෂකයන් මැතිවරණ

නිරීක්ෂණ කාර්යය සම්බන්ධයෙන් ජාත්‍යන්තර වශයෙන් පරිචයට පත්වූවන් වේ. මෙම විදේශීය නිරීක්ෂකයන් මෙම මස 06 වන දා සිට දිවයිනේ ඒ ඒ ප්‍රදේශවලට සැලසුම් සහගත ලෙස අනුයුක්ත කරනු ලදුව මේ වනවිට සක්‍රීය ලෙස මැතිවරණ නිරීක්ෂණ ක්‍රියාකාරකම්හි යෙදෙමින් සිටී.

ඒ අනුව පූර්ව මැතිවරණ නිරීක්ෂණ ක්‍රියාවලිය අපේක්ෂා කළ පරිදි සාර්ථකව පැවැත්වෙන අතර මැතිවරණ දිනයෙහිත් ඉන් අනතුරුව එළැඹෙන සති දෙකක කාලය තුළත් අංගසම්පූර්ණ මැතිවරණ නිරීක්ෂණ වැඩසටහන් ක්‍රියාවේ යෙදවෙනු ඇත.

**දේශපාලන පක්ෂ සහ අපේක්ෂකයන් වෙතින් කෙරෙන ඉල්ලීම**

පෙර පැවති මැතිවරණවලට සාපේක්ෂව මෙවර මහ මැතිවරණයේ මෙතෙක් දක්නට ලැබෙන සාමකාමීත්වයට දේශපාලන පක්ෂ/කණ්ඩායම් සහ අපේක්ෂකයන් වශයෙන් ඔබේ සාධාරණ ක්‍රියාකාරීත්වයද අතිශය සාධනීය ලෙස බලපාන ලද බව නිසැකය.

ඒ අනුව, මැතිවරණ දිනයට පෙර එළැඹෙන දින කිහිපය තුළ එකී සාමකාමී තත්ත්වය ප්‍රවර්ධනය කරමින් පවත්වාගෙන යාම උදෙසා ඔබට ද වගකීම් සමුදායක් පැවරෙනු ඇත. මැතිවරණ නීති සහ රෙගුලාසිවලටද මැතිවරණ කොමසාරිස්වරයා විසින් වරින් වර නිකුත් කර ඇති උපමාන සහ උපදෙස්වලටද අනුකූලව ඔබේ ප්‍රචාරණ කටයුතු පවත්වාගෙන යන ලෙස අපි ඔබෙන් උදක්ම ඉල්ලා සිටිමු.

මැතිවරණයේ ප්‍රතිඵල නිකුත්වීමෙන් අනතුරුව එහි ජයග්‍රහණය කුමන පාර්ශවයකට හිමිවූවද ජයග්‍රහණය හෝ පරාජය මධ්‍යස්ථව දරා ගැනීම දේශපාලන පක්ෂ/කණ්ඩායම් සහ අපේක්ෂකයන්ගේ යුතුකමකි. එසේ හෙයින්, මැතිවරණ දින හෝ ඉන් පසුවත් ගැටුම්කාරී තත්ත්වයන් ඇති නොවන පරිදි සාමකාමීව කටයුතු කරන ලෙසත් ඡන්ද දායකයන් ගැටුම්වලට පොළඹවන ප්‍රකාශ සිදුකිරීම හෝ ක්‍රියාකාරකම් සිදු නොකිරීමටත් කටයුතු කරන ලෙස අපි ඔබෙන් ඉල්ලා සිටිමු.

**ඡන්ද දායකයන්ගේ වගකීම**

යෝජිත මහ මැතිවරණය වඩාත් සාමකාමීව සහ සාධාරණව පැවැත්වෙනු ඇති බවට බලාපොරොත්තු ඇතිකරගත හැකි තත්ත්වයක් සෑම අතින්ම පාහේ උදාවී ඇත. ඒ අනුව, එවැනි සාධාරණ සහ සාමකාමී මැතිවරණ පරිසරයකින් උපරිම ප්‍රයෝජන ලබාගැනෙනා පරිදි කටයුතුකිරීමට ඡන්ද දායකයන්ට ද ඉඩකඩ විවෘතව ඇත.

පෞද්ගලික අංශයේ හාම්පුතුනට මෙවර ඡන්දයේදී පුරවැසියන්ගේ ඡන්ද අයිතිය තහවුරුකිරීම සඳහා විශේෂ වගකීමක් පැවරේ. ඒ අනුව පෞද්ගලික අංශයේ සේවකයන්ට ඔවුන්ට අදාළ වන ඡන්ද මධ්‍යස්ථානයකදී අපහසුවකින් තොරව ඡන්දය භාවිතා කරනු පිණිස නිසි පරිදි නිවාඩු පහසුකම් සැලසීමට සේව්‍ය පාර්ශවයන් කටයුතු කළ යුතුය.

එළැඹෙන මහ මැතිවරණයේදී ඡන්ද දායක ඔබ විසින් භාවිතා කරන ඡන්දයෙන් පාර්ලිමේන්තුවට තෝරාපත්වන අපේක්ෂකයන් රටේ අනාගත ගමන් මග සහ දිශාව තීරණයකරන්නන්වනු ඇත. එහෙයින්, අගෝස්තු 17 වනදා ඔබ භාවිතා කරන ඡන්දය ඔව විසින් ඍජුවම ඔබේ අනාගතය සම්බන්ධයෙන් ගනු ලබන තීරණයකි.

මෙවර මැතිවරණයේදී කවර පක්ෂයකට හෝ කණ්ඩායමකට ඡන්දය දීමට තීරණය කළා වුවද එකී ඕනෑම පක්ෂයකින් ඔබේ මනාපය ලබන්නාවූ අපේක්ෂකයන්ගේ සුදුසුකම් සම්බන්ධයෙන් පෙර මැතිවරණවලදීට වඩා බුද්ධිමත්ව සිතා බැලීමේ භාරදූර වගකීම ඡන්ද දායක ඔබට මෙවර පැවරේ. ඒ අනුව, ඔබේ මනාප ඡන්දය ලබන අපේක්ෂකයන් පාර්ලිමේන්තුවේ ප්‍රමුඛ කාර්යය වන නීති

සම්පාදනයට සක්‍රීයව හවුල්වීමේ හැකියාව සහිතවීම, රටේ නීතිය ආරක්ෂා කරන්නෙකුවීම හා අල්ලස් හෝ දූෂණ චෝදනා නොලැබූවෙකු වීම වැනි සුදුසුකම් සපුරන ලද්දන් වීමට සහතික වන්න.

මැතිවරණ දිනයේදී ඡන්දය ප්‍රකාශකිරීමට කටයුතු කිරීමේදී ඡන්ද දායක ඔබ පහත කාරණා පිළිබඳ විශේෂයෙන් සැලකිලිමත්විය යුතුය. මූලික වශයෙන්ම ඡන්දය භාවිතාකිරීම සඳහා ඔබ සතුව පිළිගත් සහ වලංගු හැඳුනුම්පතක් තිබිය යුතුය. මෙකී හැඳුනුම්පත් අතරට - ජාතික හැඳුනුම්පත, වලංගු විදේශ ගමන් බලපත්‍රය, වලංගු රියදුරු බලපත්‍රය, පූජ්‍ය/පූජක හැඳුනුම්පත, වැඩිහිටි හැඳුනුම්පත සහ විශ්‍රාමික හැඳුනුම්පත යන හැඳුනුම්පත්‍ර අයත්වේ. ඔබ සතුව ඉහත එකඳු හෝ හැඳුනුම්පතක් නොමැති නම් ඡන්දය භාවිතකිරීම සඳහා ප්‍රදේශයේ ග්‍රාම නිලධාරීවරයා මාර්ගයෙන් ලබා ගත් තාවකාලික හැඳුනුම්පතක් හෝ තිබිය යුතුය.

මැතිවරණ දෙපාර්තමේන්තුව විසින් ඔබ වෙත නිකුත් කරන ලද නිල ඡන්ද දැන්වීම් පත්‍රිකාව නොමැතිව වුවද 2014 ඡන්ද හිමි නාම ලේඛණයෙහි ඔබගේ නම සඳහන් වේ නම් සහ ඉහතින් සඳහන් කරන ලද වලංගු අනන්‍යතා ලෙඛණයක් ඔබ සතුව තිබේනම් ඔබට ඡන්දය භාවිතාකිරීමට ඉඩ ලැබෙනු ඇත. කෙසේ වුවද, ඡන්දය භාවිතාකිරීමට යන අවස්ථාවේදී ඔබට ලැබී ඇති නිල ඡන්ද දැන්වීම් පත්‍රිකාව ද රැගෙන ඡන්ද මධ්‍යස්ථානය වෙත යාම ඔබට ද මැතිවරණ බලධාරීන්ටද පහසුවකි.

අගොස්තු 17 වනදා උදෑසන 7.00 සිට පස්වරු 4.00 දක්වා ඔබේ ප්‍රදේශයේ ඡන්ද මධ්‍යස්ථානයේදී ඡන්දය ප්‍රකාශකිරීමට ඔබට ඉඩ සැලෙසෙනු ඇත. උදෑසනින්ම ඡන්දය ප්‍රකාශකිරීමත් ඡන්දය ප්‍රකාශකිරීමෙන් අනතුරුව ඡන්ද මධ්‍යස්ථානය අවට රැස්ව නොසිට එම ස්ථානයෙන් ඉවත්ව යාමත් මගින් ඡන්දය දින ඇතිවිය හැකි අනවශ්‍ය ගැටුම් සහ සංකීර්ණතා මගහැර කටයුතු කරන්නට ඔබට හැකිවනු ඇත. විශේෂයෙන්ම, මෙවර මැතිවරණයේදී ඔබේ ඡන්දය අපතේ නොයවා භාවිතාකිරීම අතිශය වැදගත්ය. එසේ හෙයින්, නියමිත වේලාව තුළ අදාළ ඡන්ද මධ්‍යස්ථානයේදී ඔබේ ඡන්දය නොවැරදීම භාවිතාකිරීමින් ප්‍රජාතන්ත්‍රවාදී ක්‍රියාවලියක් තුළ පුරවැසියන්ට පැවරෙන ඡන්දය පැහැර නොහැරීමේ යුතුකමට ඉටුකරන්නට පුරවැසි සියලුම දෙනා කටයුතු කළ යුතුය.

PAFFREL

**பாராளுமன்றத் தேர்தலில் கண்காணிப்புச் செயன்முறைக்கு 13,000 கண்காணிப்பாளர்கள்**

**2015 பாராளுமன்றத் தேர்தல் பற்றிய இரண்டாவது நிலைவர அறிக்கை – 2015.08.12**

2015 ஆகஸ்ட் மாதம் 17ம் திகதி நடைபெறவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலுக்கு இன்னும் எஞ்சியிருப்பது, 07 நாட்களுக்கும் குறைவான ஒரு காலமே. இத்தேர்தலுக்கான தபால்மூல வாக்கெடுப்பு நடவடிக்கைகள் தற்போது வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளன. அதேபோல், தேர்தல் சார்ந்த நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு தற்போது தேர்தல் திணைக்களமும் பொலிஸ் திணைக்களமும் வெகு உஷார் நிலையில் உள்ளன.

இம்முறை நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்கு 15,044,490 பேர் தகுதி பெற்றுள்ளனர். நாடுபூராவுமுள்ள 12,314 வாக்கெடுப்பு நிலையங்களில் இவர்கள் வாக்களிக்க உள்ளனர்.

**பொதுத் தேர்தல் சார்ந்த சட்டதிட்டங்களை மீறுதல்**

அண்மைக்காலமாக நடைபெற்ற சகல தேர்தல்களிடையே தேர்தல் சட்டதிட்டங்களையும் தேர்தல் சார்ந்த அமைதிச் சூழலையும் மிகச் சிறந்த முறையில் பேணி நடைபெறும் ஒரு தேர்தலாக இம்முறை நடைபெறும் தேர்தலை வர்ணிக்கலாம். இத்தகைய ஒரு சூழலை ஏற்படுத்துவதில் தேர்தல்கள் ஆணையாளர் உள்ளிட்ட தேர்தல் திணைக்களமும் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பொலிஸ் திணைக்களமும் முக்கிய பங்களிப்பாற்றுகின்றன. அதேபோல், மிகவும் அமைதியான ஒரு தேர்தலை உறுதிசெய்யக்கூடிய விதத்தில் தேர்தல் சட்டதிட்டங்களும் தேர்தல் ஆணையாளரின் உத்தரவுகள் முதலியனவும் மீறப்படாத விதத்தில் செயலாற்றிய அரசியல் கட்சிகளுக்கும் வேட்பாளர்களுக்கும் இது விடயத்தில் கௌரவம் உரித்தாக வேண்டும்.

எனினும், தேர்தல் நடைபெறும் தினம் வரையான எஞ்சியிருக்கும் ஒருசில நாட்களிலும் அதனைத் தொடர்ந்தும் மேற்சொன்ன அமைதிநிலையை உறுதிப்படுத்தி அதனைப் பேணிச் செல்வது தொடர்பில், கவனம் செலுத்தப்படவேண்டிய சில சம்பவங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

இம்முறை நடைபெறவிருக்கும் தேர்தலில் அதுவரை நிலவிய அமைதிச் சூழலுக்கு விடுக்கப்பட்ட பாரதூரமான அழுத்தமாக ஜுன் மாதம் 31ம் திகதி கொழும்பு கொட்டாஞ்சேனை, புளுமென்டல் பிரதேசத்திலிருந்து அறியக்கிடைத்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தைக் குறிப்பிடலாம். குறித்த அசம்பாவிதத்தில் ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளர் ரவி கருணாநாயக அவர்களின் ஆதரவாளர்கள் சிலர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. அச்சம்பவத்தில் இருவர் மரணமடைந்தனர்.

பிரஸ்தாப துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் பின்னணியிலுள்ள நோக்கங்கள் தொடர்பாக பலதரப்பட்ட கருத்துக்களும் முன்வைக்கப்பட்டுள்ளதையும் கருத்திற்கொள்ள வேண்டும். அவ்வாறான ஒரு கருத்தின்படி, இந்த அசம்பாவிதம் அரசியல் பின்னணியுடையதல்ல என்பதுடன் அது பிரதேசத்தில் நிலைகொண்டுள்ள நிழல் உலக கோஷ்டிகள் இரண்டுக்கு இடையில் ஏற்பட்ட ஒரு மோதல் மட்டுமே. இச்சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் பூர்வாங்க விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். அச்சம்பவம் தொடர்பில் சந்தேகத்திற்கிடமான ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக இவ்வறிக்கை தயாரிக்கப்படும் வேளையளவில் அறியக் கிடைத்துள்ளது.


பிரஸ்தாப சம்பவம் எப்பின்னணியைக் கொண்டதாக இருந்தபோதும் அரசியல் பிரசார நிகழ்வொன்று நடைபெறுவதற்கு இடையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ள நிலையில் அதில் குறிப்பான அரசியல் தொடர்பு மேலெழுந்தவாரியாகத் தெரிகிறது. அதேபோல், அமைதியான ஒரு தேர்தலை எதிர்பார்த்திருந்த பிரஜைகளுக்கும் பிரஜைகள் அமைப்புகளுக்கும் இடையில் குறித்த ஒருவித அதிர்வை ஏற்படுத்துவதற்கும் இச்சம்பவம் காரணமாக அமைந்துள்ளது. ஆகையால், இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் ஏற்படுவதைத் தடுப்பது இன்றியமையாததாகும்.

தேர்தல் ஆணையாளரின் முறைப்பாடு மற்றும் சிபார்சின் பேரில் தபால் திணைக்களத்தின் செயலாளராக இருந்த திரு.அப்துல் மஜீதை அப்பதவியிலிருந்து நீக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தமை தொடர்பிலும் எமது கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட செயலாளர், தேர்தலின்போது குறிப்பிட்ட ஒரு வேட்பாளருக்கு சார்பான விதத்தில் தனது அமைச்சின் வசதிகளை ஒதுக்கியமை ஜனாதிபதியின் மேற்சொன்ன தீர்மானத்திற்குக் காரணமாக அமைந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.


தபால் அமைச்சின் செயலாளர் தொடர்பில் உருவான இந்நிலைமைக்குப் புறம்பாக இன்னும் 53 அரசாங்க உத்தியோகத்தர்கள் தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இம்முறை நடைபெறும் தேர்தல், அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு மிகவும் சுயாதீனமாக, அழுத்தங்களிலிருந்து விடுபட்டு செயற்படுவதற்கான வாய்ப்புக் கிடைத்துள்ள ஒரு தேர்தல் என்பதே எமது கணிப்பாகும். அவ்வாறான சுதந்திரமான ஒரு சூழல் இருக்கின்ற நிலையிலும் அரசாங்க உத்தியோகத்தர்கள் தொடர்பில் இவ்வாறான ஒரு நிலைமை ஏற்படுவது கவலைக்குரிய ஒரு விடயமாகும்.


இம்முறை நடைபெறும் தேர்தல் சார்ந்த பாரதூரமான வன்செயல்கள் தொடர்பான 151 சட்டமீறல்களும் அரசாங்க அதிகாரத்தையும் சொத்துக்களையும் அரசாங்க உத்தியோகத்தர்களையும் முறைகேடான விதத்தில் பயன்படுத்தியமை தொடர்பான 128 சட்டமீறல்களும் உட்பட 1028 சம்பவங்கள் பவ்ரல் அமைப்பின் விசேட தேர்தல் கண்காணிப்புப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

மாவட்ட அடிப்படையில் எடுத்து நோக்கும்போது, தேர்தல் சார்ந்த சட்டமீறல் சம்பவங்களில் கணிசமானவை (102 சம்பவங்கள்) கொழும்பு மாவட்டத்திலிருந்தே அறிக்கையிடப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக குருணாகல் (80), காலி (70), பதுளை (70) ஆகிய மாவட்டங்களிலிருந்தும் குறிப்பிடத்தக்க அளவான சம்பவங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன.




2015 ஆகஸ்ட் மாதம் 11ம் திகதி மு.ப. 10.30 மணி வரையான காலத்தில் பவ்ரல் அமைப்பின் விசேட தேர்தல் கண்காணிப்புப் பிரிவுக்கு அறிக்கையிடப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் அந்தந்த கட்சிகளும் குழுக்களும் மேற்கொண்ட தேர்தல் சட்டமீறல்களும் தேர்தல் சட்டமீறல்கள் காரணமாக அந்தந்த கட்சிகளும் குழுக்களும் பாதிக்கப்பட்ட விதத்தையும் பின்வருமாறு காட்டலாம்:-




அரசாங்க அதிகாரத்தையும் அரசாங்க சொத்துக்களையும் முறைகேடான விதத்தில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளும் செயற்பாடுகளுக்கு ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி ஆகிய இரு தரப்பினரும் ஒருசேர பொறுப்புக்கூற வேண்டியுள்ளது. எவ்வாறாயினும், மாகாண மட்டத்தில் அரசாங்க வளங்களின் துஷ்பிரயோகம் பெருமளவுக்கு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் எதிர்க்கட்சி உறுப்பினர்களால் மேற்கொள்ளப்படுவதைக் காணலாம்.

அரசாங்க ஊழியர்கள் தமது கடமை அலுவல்களை அமுலிலுள்ள சட்டதிட்டங்களுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் அமைய பேணிச்செல்கின்றனராயின், தேர்தல் சட்டதிட்டங்களை மீறுவதற்கு அரசியல் வேட்பாளர்களுக்குள்ள வாய்ப்புகளை இழப்பர். ஆகையால், தமது கடமை அலுவல்களின்போது நேரடியாகவே செயற்பட வேண்டும் என்பதை அரசாங்க ஊழியர்கள் மனத்தில் இருத்த வேண்டும். இவ்வாறு சட்டதிட்டங்களுக்கு இணங்கவும் தேர்தல் சட்டமீறல்கள் இடம்பெறாதவாறும் நேரடியாக செயலாற்றச் செல்லும்போது ஏதேனுமொரு விதத்தில் உங்களுக்கு யாதேனும் அழுத்தமொன்றை அல்லது பிரச்சினையொன்றை எதிர்நோக்க நேரிடுமாயின், அவ்வாறான சந்தர்ப்பங்களில் பவ்ரல் அமைப்பு என்ற ரீதியில் உங்களுக்கு உதவ நாம் செயலாற்றுவோம் என்பதையும் இங்கு வலியுறுத்துகின்றோம்.

தேர்தல் காலத்தில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் உரிய நடவடிக்கைமுறைப்படி மேற்கொள்ளப்படும் அரசாங்க சேவை நியமனங்கள், இடமாற்றங்கள், பதவி உயர்வு வழங்கல்கள் மாத்திரமன்றி, குறித்த ஆணைக்குழுவின் அல்லது தேர்தல் ஆணையாளரின் அங்கீகாரம் இன்றி மேற்கொள்ளப்படும் அரசாங்க சேவைக்குரிய ஏனைய சகல நியமனங்கள், இடமாற்றங்கள், பதவிஉயர்வு வழங்கல்களும் சட்டவிரோதமானவையாகும்.

எவ்வாறாயினும், மேற்சொன்ன சட்டநிலைமைகள் குறித்து உரிய கவனம் செலுத்தப்படாமல் அரசாங்க நிறுவனங்கள் பல ஊழியர்களின் நியமனங்கள், இடமாற்றங்கள், பதவி உயர்வு

வழங்கல்களை மேற்கொண்டுள்ளன. அதன்கீழ் அரசாங்க கூட்டுத்தாபனங்கள், அதிகாரசபைகள், வேறு 12 நிறுவனங்கள், 05 அரசாங்க.ஃமாகாண அமைச்சுக்கள், வலய.ஃவட்டார கல்வி அலுவலகங்கள் உட்பட 04 கல்வி நிறுவனங்கள், 04 மாகாண சபை மற்றும் உள்ளூரட்சி நிறுவனங்கள், 03 பொலிஸ் நிலையங்கள், 03 மாகாண.ஃபிராந்திய சுகாதார நிறுவனங்கள், மற்றும் 02 அரசாங்க.ஃமாகாணத் திணைக்களங்கள் என்ற வகையில் 33 அரசாங்க நிறுவனங்களில் இடம்பெற்ற முறைகேடான ஊழியர் நியமனங்கள், இடமாற்றங்கள், பதவிஉயர்வு வழங்கல்களை அவதானிக்க முடிந்தது.

வேட்பாளர்களினால் ஒட்டப்படும்.ஃஇடப்படும் சுவரொட்சிகள், கட்அவுட்கள் முதலியவற்றை அகற்றும் செயன்முறை பாராட்டும் அளவுக்கு வெற்றிகரமாக அமுல்படுத்தப்படுகிறது. எவ்வாறாயினும், தேர்தல் காலத்தில் வேட்பாளர்களும் கட்சிகள்.ஃகுழுக்களினால் முன்னெடுத்துச்செல்லப்படும் அலுவலகங்கள் தொடர்பில் ஏற்புடைய சட்டதிட்டங்கள் விடயத்தில் ஒரு புரிந்துணர்வின்மை பல்வேறு தரப்புகளுக்கு மத்தியிலும் எழுந்திருப்பதை அவதானிக்க முடிகிறது.

எவ்வாறாயினும், தேர்தல் ஆணையாளர் காலத்திற்குக் காலம் வெளியிடும் அளவுகோல்கள் முதலியவற்றை தகுந்தவாறு சட்டங்களாக இற்றைப்படுத்துவதும் அது சம்பந்தமாக வாக்காளர்களின் விழிப்புணர்வை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதும் பயனுறுதிவாய்ந்ததாக அமையும்.

விகாரைகளை அண்டி நடைபெறும் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் மற்றும் மதத் தரப்பினர்களால் முன்நிறுத்தப்பட்டுள்ள தேர்தல் வேட்பாளர்கள் தொடர்பிலும் சிற்சில முரண்பாடான நிலைமைகள் எழுந்திருப்பதை பவ்ரல் அமைப்புக்கு அவதானிக்க முடிகிறது. குறிப்பாக, விகாரைகளை அண்டி நடைபெறும் கூட்டங்கள்.ஃகலந்துரையாடல்கள் ஊடாக அல்லது மத வழிபாடுகள், பூஜைகள் ஊடாக அல்லது அரசியல் செய்திகளை உள்ரங்கமாக வெளியிட முயற்சிப்பதைத் தடுத்தல் தொடர்பில் சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகளின் கூடுதல் கவனம் செலுத்துவது இன்றியமையாததாகும்.

<u>**தபால்மூல வாக்களிப்பு**</u>

தேர்தல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்களின்படி இம்முறை தபால்மூலம் வாக்களிப்பதற்காக 628,925 பேர் விண்ணப்பித்திருந்தனர். இவற்றில் 62,102 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. அதன்படி, இம்முறை பொதுத் தேர்தலில் தபால்மூலம் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ள வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கை 566,823 ஆகும்.

இம்முறை தபால்மூல வாக்களிப்பு நடவடிக்கைகள் ஆரம்பமாக கடந்த 03, 05, 06 ஆகிய மூன்று தினங்களிலும் இடம்பெற்றது. அதன்கீழ் ஆசிரியர் சேவை மற்றும் பொலிஸ் சேவை உத்தியோகத்தர்களுக்கு ஆகஸ்ட் 03ம் திகதியும் ஏனைய அரசாங்க ஊழியர்களுக்கு 05, 06 ஆகிய இரு தினங்களிலும் தபால்மூல வாக்களிப்பதற்கு நாள் குறிக்கப்பட்டிருந்தது. இத்தினங்களில் தமது தபால்மூல வாக்கை அளிக்க முடியாமல்போன அரசாங்க ஊழியர்களுக்கு கடந்த 08ம் திகதியும் 11ம் திகதியும் மாவட்ட தேர்தல் அலுவலகங்களில் தபால்மூலம் வாக்களிக்கும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

இம்முறை நடைபெறும் தேர்தலில் தபால்மூல வாக்களிப்பு நடவடிக்கைகள், முந்திய பொதுத் தேர்தல்களுடன் ஒப்பிடும்போது சம்பவங்கள் குறைந்த, அமைதியானதாக இடம்பெற்றது. எவ்வாறாயினும், திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் நிறுவப்பட்டிருந்த தபால்மூல வாக்களிப்பு நிலையத்தை அண்டி ஆகஸ்ட் 05ம் திகதி இடம்பெற்ற சம்பவம் தபால்மூல வாக்களிப்பின் அமைதிநிலைக்கு பாரதூரமான விதத்தில் குந்தகம் விளைவித்தது. இச்சம்பவத்தின்போது திருகோணமலை மாவட்ட ஐக்கிய மக்கள்

சுதந்திர கூட்டமைப்பு வேட்பாளர், கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் அப்துல் மஜீட் மொஹமட் நஜீப் மற்றும் அவரது ஆதரவாளர் ஒருவர் கிண்ணியா பிரதேச செயலகத்தில் தபால்மூல வாக்களிப்பு நிலையத்தில் பலவந்தமாக நுழைய முயற்சித்தமை தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டதுடன், அத்துமீறி நுழைதல் மற்றும் கடமைக்கு குந்தகம் விளைவித்தல் என்பன தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டனர். முறைகேடான விதத்தில் அத்துமீறி நுழைவதும் கடமைக்குத் தடங்கல் ஏற்படுத்துதல் என்ற குற்றச்சாட்டுகளின்கீழ் அவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தின் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து அவர்கள் விடுதலைசெய்யப்பட்டனர்.

**<u>தேர்தல் கண்காணிப்புச் செயன்முறை</u>**

2015 பாராளுமன்ற பொதுத் தேர்தல் கண்காணிப்புப் பணிகளுக்கு பவ்ரல் அமைப்பினால் முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள் தற்போது வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையில், நாடுபூராவும் நிறுவப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையங்களுடன் இணைக்கப்பட்டதை அடுத்து 12,314 நிலைகொள் தேர்தல் கண்காணிப்பாளர்களை பணியில் ஈடுபடுத்துவதற்கான தயார்நிலை காணப்படுகிறது. இதேபோல், தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கை தொடர்பில் பரந்த அறிவுள்ள நான்கு கண்காணிப்பாளர்கள் வீதம் அடங்கிய 335 நடமாடும் வாகனங்களை தேர்தல் நடைபெறும் தினத்தன்று பிரதேச செயலாளர் பிரிவு தோறும் பணியில் ஈடுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேபோல், நான்கு கண்காணிப்பாளர்கள் கொண்ட 25 நடமாடும் வாகனங்களை நாடுபூராவுமுள்ள ஆபத்தானவை என அடையாளம்காணப்பட்ட வலயங்களை கண்காணிப்பதற்காக ஈடுபடுத்தப்படுவர். இதன்படி, இம்முறை நடைபெறும் பொதுத் தேர்தலில் பவ்ரல் அமைப்பின் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக 13,754 கண்காணிப்பாளர்கள் தம் பங்களிப்பாற்றுவர்.

பொதுத் தேர்தலில் கண்காணிப்பாளர்களாக செயலாற்றவுள்ள நபர்களுக்கு தயார்செய்யப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் யாவும் தற்போது பூர்த்தியடைந்துள்ளன. அனுபவம்வாய்ந்த சட்டத்தரணிகளையும் ஏனைய தகுதிவாய்ந்த வளவாளர்களையும் கொண்ட குழுக்களினால் குறித்த கண்காணிப்பாளர்களுக்கான பயிற்சி அமர்வுகள் முன்னெடுக்கப்பட்டன. அதன்படி, எதிர்வரும் தேர்தலில் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ள சகல நிலைகொள் மற்றும் நடமாடும் கண்காணிப்பாளர்களும் பாராளுமன்றத் தேர்தல் மீது பாதிப்புச்செலுத்துகின்ற சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் தேர்தல் தினத்தன்று வாக்கெடுப்பு நிலையங்களை அண்டியும் அதற்கு வெளியிலும் செயலாற்ற வேண்டிய விதம் ஆகியன தொடர்பில் பூரணமாக அறிவூட்டப்பட்டுள்ளனர்.

பொதுத் தேர்தலுக்கு கண்காணிப்புப் பணியில் ஈடுபடுவதன்மூலம் உதவவுள்ள சகல வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களும், அதாவது 14 பேர் தற்போது நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். இச்சகல கண்காணிப்பாளர்களும் தேர்தல் கண்காணிப்புப் பணி தொடர்பில் சர்வதேச அனுபவங்கள் வாய்ந்தவர்களாவர். இந்த வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் இம்மாதம் 06ம் திகதி முதல் நாட்டின் அந்தந்தப் பிரதேசங்களில் திட்டமிட்டவாறு பணியில் ஈடுபடுத்தப்பட்டதை அடுத்து தற்போது தேர்தல் கண்காணிப்புப் செயன்முறைகளில் முனைப்பாக ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த அடிப்படையில் தேர்தலுக்கு முந்திய கண்காணிப்புச் செயன்முறை எதிர்பார்த்தவாறு வெற்றிகரமாக இடம்பெற்று வருவதுடன், தேர்தல் நடைபெறும் தினத்திலும் அதனைத் தொடர்ந்து வரும் இரண்டு வார காலத்திலும் பூரண தேர்தல் கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படும்.

## அரசியல் கட்சிகளுக்கும் வேட்பாளர்களுக்கும் முன்வைக்கப்படும் கோரிக்கை

முன்னைய தேர்தல்களுடன் ஒப்பிடும்போது இம்முறை நடைபெறும் பொதுத் தேர்தலில் இதுவரை காணக்கூடியதாக இருக்கும் அமைதிச்சூழல் அரசியல் கட்சிகள்∴குழுக்களும் வேட்பாளர்களும் என்ற வகையில் உங்கள் நீதியான செயற்பாட்டுக்கும் பெரிதும் சாதகமான முறையில் பாதிப்புச் செலுத்தியது என்பதுறுதி.

அந்த அடிப்படையில் தேர்தல் நடைபெறும் தினத்திற்கு முந்திய சில நாட்களில் குறித்த அமைதிச் சூழலை ஊக்குவித்து முன்னெடுத்துச்செல்வதற்கான பொறுப்புக்கள் தங்களிடமும் ஒப்படைக்கப்படும். தேர்தல் சட்டதிட்டங்கள், பிரமாணங்களுக்கு தேர்தல் ஆணையாளர் காலத்திற்குக்காலம் பிறப்பித்துள்ள அளவுகோல்கள், அறிவுறுத்தல்களுக்கு அமைய உமது பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லுமாறு நாம் உங்களிடம் பெரிதும் வேண்டுகின்றோம்.

தேர்தல் பெறுபேறுகள் வெளியிடப்பட்ட பின் அதில் எந்தத் தரப்புக்கு வெற்றி கிடைத்தபோதும் வெற்றி அல்லது தோல்வியை நடுவுநிலைமையுடன் ஏற்றுக்கொள்வது அரசியல் கட்சிகள்∴குழுக்கள் மற்றும் வேட்பாளர்களின் கடமையாகும். ஆகையால், தேர்தல் நடைபெறும் தினத்திலும் அதன் பின்னரும் மோதல் நிலைமைகள் ஏற்படாத வகையில் அமைதியான முறையில் நடந்துகொள்ளுமாறும், வாக்காளர்களைத் தூண்டி மோதல்களின்பால் இட்டுச்செல்லக்கூடிய விதத்தில் கருத்துக்களைத் தெரிவித்தல் அல்லது செயற்படுதல் ஆகியவற்றைத் தவிர்ந்துகொள்ளுமாறும் நாம் உங்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

## வாக்காளர்களின் பொறுப்பு

உத்தேச பொதுத் தேர்தல் மிகவும் அமைதியான முறையிலும் நீதியாகவும் நடைபெறும் என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்திக்கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலை எல்லா வகையிலும் உருவாகியுள்ளது. அதன்படி, அவ்வாறான நீதியான, அமைதியான ஒரு தேர்தலுக்கான சூழலிலிருந்து உயர்ந்தபட்ச பிரயோசனத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் செயலாற்ற வாக்காளர்களுக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

தனியார்துறை முதலாளிமாருக்கு இம்முறை தேர்தலில் பிரஜைகளின் வாக்குரிமையை உறுதி செய்வதற்கான ஒரு விஷேச பொறுப்பு உரித்தாகிறது. அதன்படி, தனியார்துறை ஊழியர்களுக்கு அவர்களுக்கு உரிய வாக்கெடுப்பு நிலையத்தில் சிரமமின்றி வாக்களிக்கும் பொருட்டு உரிய முறையில் விடுமுறை வசதி செய்துகொடுப்பதற்கு முதலாளிமார் தரப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வாக்காளர்களாகிய உங்களால் அளிக்கப்படும் வாக்கின் மூலம் பாராளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்படும் வேட்பாளர்கள் நாட்டின் எதிர்கால பயணப் பாதையையும் திசைமுகப் போக்கையும் தீர்மானிக்கும் காரணியாக அமைவர். ஆகையால், ஆகஸ்ட் மாதம் 17ம் திகதி நீங்கள் அளிக்கும் வாக்கானது உங்கள் எதிர்காலம் விடயத்தில் நீங்கள் நேரடியாகவே எடுக்கும் ஒரு தீர்மானமாகும்.

இம்முறை நடைபெறும் தேர்தலில் எந்தக் கட்சிக்கு அல்லது குழுவுக்கு வாக்களிக்கத் தீர்மானித்திருந்த போதும் குறித்த எந்தவொரு கட்சியிலிருந்து உங்கள் விருப்பு வாக்கைப் பெறும் வேட்பாளர்களின் தகுதிகள் சம்பந்தமாக முந்திய தேர்தல்களை விட மிகவும் தூரநோக்குடன் தீர சிந்தித்துப் பார்க்கும் பாரதூரமான பொறுப்பு வாக்களர்களாகிய உங்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது. அதன்படி, உங்கள் விருப்பு வாக்கைப் பெறும் வேட்பாளர்கள் பாராளுமன்றத்தில் முக்கிய கருமமான சட்டவாக்கத்தில் முனைப்புடன் பங்கேற்கும் ஆற்றல்

பொருந்தியவராக இருத்தல், நாட்டின் சட்டத்தைப் போற்றிக் காக்கக்கூடியவராக இருத்தல், இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படாதவராக இருத்தல் முதலிய தகுதிகளைப் பூர்த்திசெய்தவராக இருக்கின்றாரா என்பதை முற்கூட்டியே உறுதிசெய்துகொள்ளுங்கள்.

தேர்தல் தினத்தன்று வாக்களிக்கச் செல்லும்போது வாக்காளர்களாகிய நீங்கள் பின்வரும் அம்சங்கள் மீது விஷேச கவனம் செலுத்த வேண்டும். முக்கியமாக வாக்களிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட, செல்லுபடியான ஓர் அடையாள அட்டையை நீங்கள் கைவசம் வைத்திருக்க வேண்டும். தேசிய அடையாள அட்டை, செல்லுபடியான வெளிநாட்டு கடவுச்சீட்டு, செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம், மதகுருமார்களுக்கான அடையாள அட்டை, முதியோர்களுக்கான அடையாள அட்டை, ஓய்வூதியர்களுக்கான அடையாள அட்டை ஆகிய அடையாள அட்டைகளில் ஏதேனும் ஒன்று உங்கள் வசம் இருக்க வேண்டும்.

தேர்தல் திணைக்களத்தினால் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை இல்லாதபோதும் 2014 தேருநர் இடாப்பில் உங்கள் பெயர் குறிப்பிடப்பட்டிருக்குமாயின், அதேபோல் மேற்சொல்லப்பட்ட செல்லுபடியான அடையாள ஆவணமொன்று உங்கள் வசம் இருக்குமாயின், உங்களுக்கு வாக்களிக்க சந்தர்ப்பம் அளிக்கப்படும். எவ்வாறாயினும், வாக்களிக்கச்செல்லும் வேளையில் உங்களுக்குக் கிடைத்துள்ள உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை சகிதம் வாக்கெடுப்பு நிலையத்திற்குச் செல்வது உங்களுக்கும் தேர்தல் அதிகாரிகளுக்கும் வசதியானதாக இருக்கும்.

ஆகஸ்ட் மாதம் 17ம் திகதி அதிகாலை 07.00 மணி தொடக்கம் பி.ப. 04.00 மணி வரை உங்கள் பிரதேசத்திலுள்ள வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கு உங்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும். அதிகாலை வேளையிலேயே வாக்களிப்பதும் வாக்களித்த பின் வாக்கெடுப்பு நிலையத்தைச் சூழ கூடியிருக்காமல் அவ்விடத்தை விட்டு அகல்வதும் மூலம் தேர்தல் தினத்தில் ஏற்படக்கூடிய அநாவசியமான மோதல்களையும் வீண்பிரச்சினைகளையும் தவிர்க்கக் கூடியதாக இருக்கும். குறிப்பாக, இம்முறை நடைபெறும் தேர்தலில் உங்கள் வாக்கை வீணடித்துவிடாமல் பயன்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும். ஆகையால், உரிய நேரத்தில் உரிய வாக்கெடுப்பு நிலையத்தில் உங்கள் வாக்கை தவறாமல் அளிப்பதன்மூலம் ஜனநாயக செயன்முறையில் பிரஜைகளுக்கு உரித்தாகும், ஆள்மாறாட்ட வாக்குப் போடப்படுவதைத் தவிர்க்கும் கடமையை நிறைவேற்ற பிரஜைகள் அனைவரும் செயலாற்ற வேண்டும்.

**ரோஹண ஹெட்டிஆரச்சி**
**நிறைவேற்றுப் பணிப்பாளர்**
**பவ்ரல் அமைப்பு**